பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

UTHAYAN

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஹூ ஐப்பசி மீ 18 உ. ஞாயிற்றுக்கிழமை (04 - 11 - 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 15 கதிர்: 242

# இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்

# அமெரிக்கா கவலை தெரிவிப்பு

## ஸோலர்ஸ் குழு நீண்ட அறிக்கை

நியூயோர்க், நவ. 4

**இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து அமெரிக்கா கவலையும், கண்டனமும் தெரிவித்துள்ளது.**

**மனித உரிமை மீறலை நிறுத்துவதற்கு எல்லாத் தரப்பினரும் உதவ வேண்டும்; ஆதரவளிக்க வேண்டும் - என்று அமெரிக்க காங்கிரஸ் வலியுறுத்தி உள்ளது.**

அமெரிக்க காங்கிரஸின் தெற்காசிய விவகாரத்துக்குப் பொறுப்பான ஸோலர்ஸ் குழுவின் பிரதிநிதி திரு. ஜோன் கெல்லி, இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

இலங்கையில் நீண்ட காலமாக மனித உரிமைகள் மீறப்படுவதாக வந்த குற்றச்சாட்டுக்கள் இப்போது உண்மை என்று கொள்ளப்பட வேண்டிய நிலை உருவாகி உள்ளது.

கடந்த நான்கு மாதங்களாக நடக்கும் யுத்தத்தில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. அவற்றை நிறுத்தச் சகல தரப்பினரும் உதவ வேண்டும்.

இந்த யுத்தத்தில் சுமார் 4 ஆயிரத்து 800 பேர் நான்கு மாதங்களில் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

யுத்தம் நடத்தி வரும் ஒரு பக்கத்தினரான இலங்கை இராணுவத்தின் நிலை தெளிவற்றதாக உள்ளது.

அந்த நாட்டின் அமைதியை நிலைநாட்டுவது சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் கைகளில்தான் தங்கியுள்ளது.

எவ்வாறாயினும் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படக் கூடாது என்பதில் வெளியுலகம் கவனம் செலுத்தும் காலம் வந்துவிட்டது— என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ]

## இராணுவ நடவடிக்கை மன்னாரில் தொடர்கிறது

யாழ்ப்பாணம், நவ. 4

மன்னார் பகுதியில் கடந்த முதலாம் திகதி ஸ்ரீலங்காப் படைகள் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கைகள் நேற்று மூன்றாம் நாளாக தொடர்ந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

பல பகுதிகளில் தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

நகரில் சட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தின் (பி. எம். சி) கட்டடத்தில் இராணுவம் புதிய முகாம் ஒன்றை அமைத்திருப்பதாகவும் தெரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அரச பதவிப் பரீட்சைகள் 17 ஆம் 24 ஆம் திகதிகளில்

### தமிழ் பரீட்சார்த்திகள் நிலை என்ன?

கொழும்பு, நவ 4

அரசாங்கசேவை, மாகாண சபை சேவைகளில், விண்ணப்பங்கள் கோரப்பட்ட பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைகள் இம்மாதம் 17 ஆம் திகதி நடைபெறும் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எழுதுவினைஞர்கள், கணக்குப் பதிவாளர்கள், களஞ்சியப் பொறுப்பாளர்கள், தபால் அதிபர்கள், ரயில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆஸ்பத்திரி இடமாற்றம் தாமதமாகும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ். போதனா ஆஸ்பத்திரியை— மீண்டும் நகருக்கு— பழைய இடத்துக்கு மாற்றம் செய்வதில் காலதாமதம் ஏற்படும் என அறியவருகிறது.

நாளை 5ஆம் திகதி முதல் யாழ் ஆஸ்பத்திரி பழைய இடத்தில் இயங்கும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

தவிர்க்கமுடியாத சில காரணங்களினால் இடமாற்றம் தடைப்பட்டுள்ளது என்றும், மறு அறிவித்தல்வரை மானிப்பாயிலேயே ஆஸ்பத்திரி இயங்கிவரும் என்றும் பணிப்பாளர் டாக்டர் செல்வி புஷ்பா சண்முகம் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஊழியர்கள் இதுகாலவரை கடைப்பிடித்தது போன்று தமது கடமைகளைத் தொடரும்படியும் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ 15)

## மலையகத் தொழிலாளர்கள் இந்தியா திரும்பக் காலக்கெடு!

நுவரெலியா, நவ. 4

இந்தியக் கடவுச் சீட்டுப் பெற்ற மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் இரண்டு வாரங்களுக்குள் இந்தியா திரும்பிவிட வேண்டும் என்று காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

அட்டன் பகுதியைச் சேர்ந்த தோட்டங்களில், அவற்றின் உத்தியோகபூர்வ அறிவித்தல் பலகைகளில் இத்த எச்சரிக்கைக் குறிப்புகள் ஒட்டப்பட்டுள்ளன.

''இந்தியக் கடவுச் சீட்டுப் பெற்றவர்கள் இரு வாரங்களுக்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும். அவ்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழ் அகதிகள் படுகொலை திருமலையில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 4

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் அகதிகள் தொடர்ந்து படுகொலைசெய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை, கிளப்பன் பேர்க் தடுப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 23 தமிழர்கள் கடந்தமாத இறுதியில் உவர்மலைக்கு ஏற்றிவரப்பட்டு அங்குவைத்து துப்பாக்கியால் சுட்டும், வாளால் வெட்டியும் கொலை செய்யப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

மூதூர், பச்சனூர், தம்பலகாமம் பகுதிகளிலும் தமிழ் அகதிகள் கடத்திச் செல்லப்படுவதும், காணாமற்போவதும், சுட்டுக் கொல்லப்படுவதும் அடிக்கடி இடம்பெற்று வருவதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [உ]

## ஆஸ்பத்திரி நோயாளர்கள் மழைக் குளிரில் நடுக்கம்!

யாழ்ப்பாணம், நவ. 4

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மானிப்பாய் ஆஸ்பத்திரியில் உள்ள நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

ஆஸ்பத்திரியின் உள்ளே நிலத்திலும், சுவர்களிலும் பெரும் நீர்க்கசிவு மற்றும் ஒழுக்குகள் ஏற்பட்டுள்ளன.

ஆஸ்பத்திரியில் இட நெருக்கடி காரணமாக பெரும்பாலான நோயாளர்கள் நிலத்திலேயே படுத்து உறங்கவேண்டிய அவல நிலை இருந்து வருகிறது

இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களையும் கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

நோயாளர்கள் பலர் குளிரினால் நடுங்கியபடி அவஸ்தைப்படுவதை நேற்றுக் காண முடிந்தது. துர்நாற்றம் வேறு மூக்கைத் துளைக்கிறது. (ஒ-5)

## நிபுணர் குழு பார்வையிட்டது

யாழ்ப்பாணம் மற்றும் தீவுப் பகுதி இறங்கு துறைகளில் பொருள்களை இறக்குவது தொடர்பான வசதிகள், கஷ்டங்களை ஆராய்வதற்கென சப்பல் போக்குவரத்துத் துறை நிபுணர் ஒருவரை உள்ளடக்கிய செஞ்சிலுவைக் குழு நேற்று முன்தினம் இப்பகுதிகளைப் பார்வையிட்டது. (உ-5)

## ஊர்காவற்றுறை செல்ல செஞ்சிலுவையினருக்கு ராணுவம் அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், நவ. 4

செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் ஊர்காவற்றுறைக்குள் சென்று வருவதற்கு அங்குள்ள இராணுவத்தினர் அனுமதி மறுத்துவிட்டனர்.

ஊர்காவற்றுறையில் உள்ள மக்களுக்கு உதவிகள் வழங்கவும், அவர்களின் நலன்களை நேரில் கண்டறியவும் நேற்று முன்தினம் [வெள்ளி] செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் குழு ஒன்று அங்கு சென்றிருந்தது.

பிரஸ்தாப குழுவினர் அப்பகுதி மக்களுக்கு வழங்குவதற்கென 60 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களையும் எடுத்துச் சென்றிருந்தனர்.

ஊர்காவற்றுறை சென்றிருந்த குழுவில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, யாழ். செஞ்சிலுவைச் சங்கம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவில் மோதல்

ஆனையிறவில் நேற்று (சனி) அதிகாலை 4.30 மணியளவில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றது.

தரைமார்க்கமாகவும், படகுகள் மூலமாகவும் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர், குறிஞ்சாதீவுப் பக்கமாக முன்னேற முயன்றபோதே இந்த மோதல் மூண்டது.

சுமார் ஒரு மணிநேரம் நடந்த மோதலை அடுத்து படையினர் பின்வாங்கி மீண்டும் முகாமுக்குள் சென்றனர். (ஒ-15)

## கிளாலி-பூநகரி படகுச் சேவை

கேரதீவில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியைத் தொடர்ந்து கிளாலி கடற்றொழிலாளர் சங்கத்தினர் கிளாலியிலிருந்து பூநகரிக்கு படகுச் சேவையை ஆரம்பித்துள்ளனர்.

இச்சேவையை அடுத்து பெருமளவு பயணிகள் நன்மை அடையத் தொடங்கி உள்ளனர். உணவுப் பொருள்களும் தாராளமாகக்கொண்டு வரப்படுகின்றன.

உணவுப் பொருள்களை ஏற்றி, இறக்குவதற்காக லொறிகளும் கிளாலிக்கு வரத் தொடங்கியுள்ளன. (ஒ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. பூச்சி நீக்கியது. தொடர்பு பொ. தில்லைராசா 3ம் கட்டை பருத்தித்துறைவீதி, கல்வியங்காடு. (Organ Classes) எதிர் வீடு. [14622]

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். [14550]

### பால் விற்பனை

யாழ். பெருமாள் கோவிலடியிலுள்ள எமது பால் விற்பனைச் சாலை தினமும் காலை 6.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை திறந்திருக்கும். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு. (சி/5361)

### 'நிலவே நீ மயங்காதே''

மீரா வெளியீடு வன்னியூர் இந்திரா பிரியதர்ஷினி எழுதியது ஒரு பெண்ணின் வாழ்க்கை எதிர்பாராமல் நாசமாகிவிட்டது. அவளுக்கு மறுவாழ்வு கொடுக்க சிறு துரும்பாவது இருக்கிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி. பிக்பென்ஸ் (B), கிளிநொச்சி, ஸ்ரீகாந் புத்தக சாலை, நல்லூர். (14560)

### வகுப்புக்கள்

பாலர் கல்விக் கழகப் பாலர் பாடசாலைகள் வழமைபோல் நடைபெறுகின்றன. ஞானக் குழந்தை இல்லம் அரசடி வீதி, பலாலிவீதி, யாழ் றோட், விக்னேஸ்வரா பிறவுண் வீதி, கலட்டி அம்மன் சீனியர் லேன், வளர்மதி மானிப்பாய் வீதி, 5ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறும். புதிய மாணவர்களும் சேர்க்கப்படுவர். (14623)

### தையல் வேலை

பெண்களுக்கான ஆடைகள் வெட்டித் தைக்கக்கூடிய பெண் தேவை. தொடர்பு டில்சாந்தி 73, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். (காலை 9.00 மணி முதல் மாலை 5 மணி வரை) (14627)

### டில்கா வாச் வேக்ஸ் [Dilka Watch Works]

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையிலும் 3, சித்தன்கேணி வீதி, பண்டத்தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (14613)

### அல்டி (ALDI)

சகலவிதமான மணிக்கூடுகள் திருத்துவதற்கும் கைக் கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், மணிக்கூடு பற்றறிகள், நியாய விலையில் பெற்றுக் கொள்வதற்கும் இன்றே விஜயம் செய்யுங்கள் அல்டி 269/ மின் சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். முன்பு எம்மிடம் மணிக்கூடு திருத்த தந்தவர்கள் 10ம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளவும். (சி/5364)

### German Language

German Cultural Association இடை நிறுத்தப்பட்ட மேற்படி பாஷைக்கான வகுப்புக்களும் புதிய வகுப்புக்களும் 05-11-90 இல் ஆரம்பமாகின்றன. தொடர்பு சபாநாயகம் 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (14628)

### இராசா டீசல் என்ஜினியேர்ஸ்

திங்கட்கிழமை 5 - 11 - 90 முதல் பழைய இடமாகிய 180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் மீண்டும் சேவையை ஆரம்பிக்கின்றது என்பதை அறியத் தருகின்றோம். (14625)

### கிளீன் கட் போட்டோஸ்ரற்

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ளவும் அடையாள அட்டைகட்கு சவரிட்டுக் கொள்ளவும் கிளீன் கட் 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் யாழ். இந்து மகளிர் சந்திக்கு அண்மையில். (சி-5355)

### தவறிவிட்டது

காயத்திரி கணேஷசுந்தரம் இல. 675970963 V உடைய அடையாள அட்டையும் இல 87/A/35 உடைய பல்கலைக் கழக அடையாள அட்டையும் தவறிவிட்டது. எடுத்தவர்கள் 8, இலந்தைக் குளம் வீதி கொழும்புத்துறை யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (14626)

## ஆயுட்காலம் எவ்வளவு?

மனிதனின் சராசரி ஆயுட்காலம் எவ்வளவு என்பதில் வைத்திய நிபுணர்களுக்கு இடையே புதிதாக அபிப்பிராய பேதம் ஏற்பட்டுள்ளது.

சிக்காகோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வைத்திய ஆய்வுக்குழு ஒன்று நடத்திய பரிசோதனையில் மனிதனின் சராசரி ஆயுட்காலம் 85 ஆண்டுகள் தான் என்று கண்டு பிடித்து உள்ளது.

இதனை இன்னொரு விஞ்ஞானிகள் குழு மறுத்துள்ளது மனிதனின் சராசரி ஆயுட்காலம் நூறுஆண்டுகள் என்று இக்குழு கூறியுள்ளது. [இ-எ]

## மழைக்கு 80 பேர் பலி

சென்னை, நவ. 4

கடும் மழை காரணமாக தமிழகத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்தது என்று அறிவிக்கப்படுகின்றது.

சென்னை நகரில் மட்டும் 15 பேர் உயிரிழந்தனர்.

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### கலந்துரையாடல்

O/L DAY CLASS
[05 - 11 - 90 திங்கள் காலை 9 மணி]

O/L Sat, Sun
[10 - 11 - 90 சனிக்கிழமை காலை 9 மணி]

O/L EVENING CLASS
ஆண்டு 6, 7, 8, 9 } 5 - 11 - 90 திங்கள் பி.ப3மணி.

A/L கலை வர்த்தக வகுப்புக்கள்

A/L SAT, SUN
(90, 91, 92 ஆண்டு) 10-11-90 காலை 9மணி.

A/L DAY CLASS
(90 ஆம் ஆண்டு) 12-11-90 காலை 9மணி.

மீண்டும் வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கான நேர அட்டவணை சம்பந்தமாகவும் மேலும் விபரங்கள் பற்றிய கலந்துரையாடலில் சகல மாணவர்களையும், ஆசிரியர்களையும் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

குறிப்பு: வெளிமாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த சகல மாணவர்களையும் மேற்படி கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

— அதிபர். [சி-5367]

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்:
10 - 03 - 1946

மறைவு:
04 - 11 - 1988

திதி: 12 - 11 - 1990

### கனகசபை தனபாலசிங்கம்

(பொதுசனத் தொடர்பு அதிகாரி
வ. பி. போ. சபை கோண்டாவில்)

எம் குலவிளக்கே! எல்லோர்
நெஞ்சிலும் நிறைந்த மேலோய்!
செந்தமிழ்ப் பணிகட் கெல்லாம்
செகத்திடைத் துணையாய் நின்றாய்!
இங்கெமைப் பிரிந்தாய் மாற்றார்
இயற்றிய கொடுமையாலே!
என்றென்றும் எங்கள் நெஞ்சில்
இருக்கின்றாய்! வணங்குகின்றோம்!

— குடும்பத்தினர்.

காங்கேசன்துறை. [14618]

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### சண்முகம் பொன்னையா

மலர்வு: 10 - 08 - 1918
உதிர்வு: 14 - 11 - 1989

திதி: 4 - 11 - 1990

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் நின்று பிரகாசித்து எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஆகியும் தங்கள் நினைவு என்றென்றும் எங்கள் இதயங்களை விட்டகலாது.

தங்கள்:
குடும்பத்தினர்.

சோண்டாவில் வீதி
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (145[illegible])

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அந்தோனிப்பிள்ளை யூக்றிஸ்ரா (செல்லக்கண்டு)

அன்னை மடியில்:
21 - 0[illegible] - 1959

அன்னியர் அழிப்பு:
04 - 11 - 1988

நாடி வந்த துணையே!
நடுவயதில் போனதேன்
ஈராண்டு சென்றாலும்
என் இதயப்புண்
ஆறாது.

உமது பிரிவால் துயருறும்:
மனைவி,
பிள்ளைகள்,
அப்பா, அம்மா,
சகோதர,
சகோதரிகள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

தோலகட்டி,
வசாவிளான். [14607]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
21 - 05 - 1945

அன்னியர் அழிப்பு:
04 - 11 - 1988

### லாசர் பிரான்சிஸ் (சிங்கன்)

நாடி வந்த துணையே!
நடு வயதில் போனதேன்
அள்ளி கொடுத்தேன்
அடி வயிறு நெருப்பிட்டேன்
ஈராண்டு சென்றாலும் எம்
இதயப் புண் ஆறவில்லை

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள், மருமக்கள்,
பேரன், பேத்திமார், மச்சான்மார், மச்சாள்மார்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

10ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. [14606]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பொருளாதார முற்றுகையா?

சீ-நோர் நிறுவனத்தின், வடபகுதியில் உள்ள இரண்டு தொழிற்சாலைகளின் எதிர்காலம் கேள்விக்குரியதாகி உள்ளது. அவை மூடப்படுமோ என்ற ஓர் அச்ச நிலை அவற்றின் ஊழியர்கள் மத்தியில் எழுந்துள்ளது. அங்கு பணிபுரியும் ஊழியர்களில் 233 பேரை வேலையிலிருந்து நீக்குமாறு கொழும்புத் தலைமை அலுவலகம் விடுத்த உத்தரவே இப்படி ஒரு கலக்கத்தை உண்டு பண்ணி இருக்கிறது.

சீ-நோர் தொழிற்சாலைகளை மூடுவது அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கு மட்டும் பாதிப்பைத் தரும் என்று நினைத்தலாகாது. குடாநாட்டின் பொருளாதாரத்திலும் பாதிப்பை உண்டாக்கும். எனவே அப்படி ஒரு பாதக நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பதும் தடுப்பதும், அவசியம்.

சீ-நோர் என்ற ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டதே யாழ்ப்பாணத்தில் (காரை நகரில்) தான். வடக்கு-கிழக்கின் அளவிட முடியாத கடல் வளத்தைப் பயன் படுத்துவதற்கு ஒரு முன்னோடித் திட்டமாக அதனை ஸ்தாபிக்கக் காரணமாக இருந்தவர் ஒரு தமிழர். அவரது தனி நபர் முயற்சிக்கு, நோர்வே வழங்கிய ஒத்துழைப்பால், ஆதரவால் காரைநகர் படகு கட்டும் தொழிற்சாலை வடக்கின் மூன்றாவது தொழிற்சாலையாக எழுபதுகளின் முற்பகுதியில் எழுச்சி பெற்று வந்தது.

தமிழர் பொருளாதாரம் வெளிநாடு ஒன்றின் உதவியுடன் வளர்வதைச் சகிக்க முடியாத, தாங்கிக்கொள்ள முடியாத சிங்கள அரசு, பலவந்தமாக சீ-நோரின் நிர்வாகத்தில் அத்துமீறி உட்புகுந்து கொண்டது. இந்த ஆரம்பத்துடன் இப்போது நோர்வேயின் தொழில் நுட்பம், நிதிஉதவி யாவும் தென்னிலங்கையிலேயே முழுக்க முழுக்கச் செறிகிறது.

வழிகாட்டிக் கொடுத்தவன், விதை நட்டவன் தமிழன், பழம் பிடுங்குபவன் சிங்களவன் என்ற நிலையே இப்போதைய பரிதாபம்.

தமிழர்களின் பொருளாதார வளர்ச்சிகளை முளையிலேயே கிள்ளி எறிந்து விட வேண்டும் என்ற நய வஞ்சகத்துடன் திட்டமிட்டுச் செயற்பட்டு, வடக்கில் சீ-நோரின் வளர்ச்சிக்கு இடையூறு விதித்து வந்தார்கள் சிங்கள உயர் அதிகாரிகள்.

வடக்கு - கிழக்கில் பாதுகாப்பு நிலைமை சரியாக இல்லை என்று சாட்டுக் கூறி பல வெளிநாட்டு உதவிகளை இங்கு பயன்படுத்தாமல் தெற்குக்குத் திருப்பிய கெட்டித்தனம் மிகுந்தவர்கள் அல்லவா அரச அதிகாரிகள்?! அதே தந்திரத்துடன் சீ-நோரின் வளர்ச்சியும் வடக்கில் முதலில் மட்டுப்படுத்தப்பட்டு, பின்னர் முற்றாகத் தடுக்கப் பட்டது.

இப்போது தொழிற்சாலைகளையே மூடி வடக்கின் பொருளாதாரத்தைக் கெடுக்க அத்திவாரம் போடப்படுகிறது. தமிழர் மீது பிரகடனப்படுத்தப் படாத பொருளாதாரத் தடை விதித்துள்ள அரசு, நீண்டகாலம் பொருளாதார முற்றுகைக்கும் வித்திடுகிறது, கருக்கூட்டுகிறது எனலாம்.

# தீவுப் பகுதியிலும் கடற்றொழில் பாதிக்கப்படும் அபாயம்

## படையினர் தாக்குதல் அதிகரிப்பு

புளியங்கூடல், நவ. 4

கடற்படையினரின் நடவடிக்கைகள் காரணமாக தீவுப்பகுதியிலும் மீன்பிடித் தொழில் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் இடம் பெற்று வரும் மயிலிட்டிப் பகுதியில் ஏற்கனவே மீனவர்கள் பலர் தொழில் இழந்துள்ளதும் ஆயிரக் கணக்கான மீனவர் குடும்பங்கள் வருமானம் இழந்து பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதும் தெரிந்தவையே.

தற்போது தீவுப்பகுதிகளில் மீனவர்கள் மீது கடற்படையினரின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.

இதனால் தீவுப்பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான மீனவர் குடும்பங்கள் வருமானம் இழக்கும் ஆபத்து நிலவி வருகிறது.

இராணுவம் நிலை கொண்டுள்ள ஊர்காவற்றுறை கடல் பகுதியில் தற்போது மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை.

ஊர்காவற்றுறை மீனவர்கள் சுருவில் கடல் பகுதியிலேயே தொழில் செய்து வருகின்றனர்.

இப்படி இடம் பெயர்ந்து தொழில் செய்த மீனவர் ஒருவர் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கடந்த 28 ஆம் திகதி மரணமானார்.

காரை நகர் கடற்படையினர் இப்பகுதிகளில் அதிவேகப் படகுகளில் செல்வதும் கண்மூடித்தனமாக திடீர் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதும் மீனவர்கள் மத்தியில் பெரும் அச்ச உணர்வை ஏற்படுத்தி இருக்கிறது.

(இ-ரி)

# கிளிநொச்சி ஆஸ்பத்திரி

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை மீண்டும் இயங்கத் தொடங்கி உள்ளது.

அங்கு கடமையாற்றும் சகல ஊழியர்களையும் உடனடியாக வைத்தியசாலையில் சமுகமளிக்கும்படி சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் ந. கனகசபை கேட்டுள்ளார். (இ-6)

# காலம் பிந்திய மருந்தை விற்பனை செய்ய வேண்டாம்

## வர்த்தகருக்கு சங்கம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ். மாவட்டத்திலுள்ள ஆங்கில மருந்து விற்பனையாளர்கள், விநியோகஸ்தர்கள், இறக்குமதியாளர்கள் ஆகியோர் பாவனைக்குரிய காலம் பிந்திய மருந்துவகைகளை எக்காரணம் கொண்டும் விற்பனை செய்யக் கூடாது.

யாழ். ஆங்கில மருந்து வர்த்தகசங்கம் இப்படி அறிவித்துள்ளது:

சங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மற்றைய தீர்மானங்கள் வருமாறு:-

★ தரமான மருந்துவகைகள் மட்டுமே சந்தைப்படுத்தப்பட வேண்டும்.

★ மருந்துவகைகள் அதிகூடிய சில்லறை விலையிலும் பார்க்கக்கூடுதலாக விற்பனை செய்யக்கூடாது.

★ மருந்துவகைகளை விற்பனை செய்வதற்குரிய சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை கவனத்தில் கொள்ளவேண்டும்.

★ எந்த ஒரு விற்பனையாளரும் மருந்தை விலை கூட்டி விற்பதையோ, தனது விருப்பப்படி செயற்படுவதையோ சங்கம் அனுமதிக்காது. (இ-6)

# ஆசிரியர் சம்பளம்: பணமாக வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 4

நவம்பர் மாதத்தில் இருந்து ஆசிரியர்களின் மாதாந்த வேதனத்தை பணமாக வழங்க நடவடிக்கை எடுங்கள்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பான மகஜர் கல்வி அமைச்சர், கல்வி துணை அமைச்சர், அத்தியாவசிய சேவைகள் நாயகம் ஆகியோருக்கு யாழ். அரசாங்க அதிபர், யாழ். கல்விப் பணிப்பாளர் ஆகியோர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதத்திலிருந்து யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட காசோலைகளை அவர்கள் மாற்றுவதற்கு வசதியாக யாழ். மாவட்டத்தில் உள்ள வங்கிகளுக்குப் பணமாக 15 கோடி ரூபாவை அனுப்பி வைக்கும்படியும் அவர் அந்த மகஜரில் கோரி உள்ளார்.

(இ)

# முன்னர் ஓய்வு பெற்றோருக்கும் சலுகை

கொழும்பு, நவ. 4

1989 ஜூலை அரச சுற்றறிக்கையின் அடிப்படையில் சேவையில் இருந்து இளைப்பாறிய சகல அரசாங்க ஊழியர்களுக்கும் இவ்வாண்டு அக்டோபர் மாத ஓய்வூதியச் சுற்றறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகளும் வழங்கப்படும்.

இது தொடர்பான உத்தரவை ஜனாதிபதி விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சுக்கு பணிப்புரை வழங்கப் பட்டுள்ளது. (இ)

# அடைமழை காரணமாக தபால் விநியோகம் இல்லை

யாழ்ப்பாணம், நவ. 4

நேற்றைய அடை மழை காரணமாக திட்டமிட்டது போல், யாழ் நகர தபால் விநியோகம் நேற்று நடை பெறவில்லை.

யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

நேற்று பிரதம தபாலகத்துக்கு கடிதம் பெற வந்த பொதுமக்களுக்கு மட்டுமே கடிதங்கள் விநியோகிக்கப்பட்டன.

இன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினமாகையால் நாளை திங்கட்கிழமையே யாழ். நகர தபால் விநியோகம் மேற் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-6)

# ஊர்காவற்றுறை ஓய்வூதியருக்கு

ஊர்காவற்றுறை இலங்கை வங்கியில் இதுவரை தமது ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்குநாளை திங்கள் காலை நாரந்தனைப் பாடசாலையில் வைத்து காசோலையாக வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(இ)

# மரணம்

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ். திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியரான அருட்சகோதரி ஜீன் மாறி சவரிமுத்து எஸ்பவர் விசர்நாய்க்கடி நோய்க்கு ஆளாகிஉயிரிழந்தார். [உ-6]

# பண்ணைப் பக்கத்தால் முன்னேற முடியாது இரண்டு வாரங்கள் வாளாதிருந்த படையினர்

( IX )

ஆகஸ்ட் 5இல் விடுதலைப் புலிகள் புகட்டிய பாடத்தை அடுத்து கோட்டைப் படையினரை மீட்டு எடுப்பது என்று அரசாங்கம் முடிவு செய்தது. உடனே அதற்கான திட்டம் செயற்படுத்தப்பட்டது.

காரைநகர் கடற்படை முகாமில் மேலும் துருப்புகள் குவிக்கப்பட்டன.

ஆகஸ்ட் 22ஆம் திகதியன்று

### கோட்டைப் பக்கம் நேரடிப் பார்வை

அந்தத் துருப்புகள் கண்மூடித்தனமாக- வான், தரை மற்றும் கடல் மார்க்கமாக- மும்முனைத் தாக்குதல்களை நடத்தியவாறு, காரைநகரில் இருந்து வெளியேறி ஊர்காவற்றுறை நோக்கி முன்னேறின.

அங்கிருந்து மண்டைதீவு நோக்கி படையினரின் ''அழிவுப் பாதை'' தொடர்ந்தது.

படையினரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த தீரமுடன் போராடிய பல போராளிகள் களப்பலியாகினர்.

காரைநகர் முதல் மண்டைதீவு வரை படையினர் நடத்திய அழிவு, அட்டூழியங்கள் வர்ணிக்கமுடியாதவை.

பேரழிவு நடத்திக்கொண்டு அல்லைப்பிட்டிவரை வந்து சேர்ந்த படைகளுக்கு அதற்கு அப்பால்தான் பெரும் சிக்கல் இருந்தது.

படைகளின் வரவை எதிர் பார்த்து புலிகள் விதைத்திருந்த கண்ணி வெடிகள் படைகளுக்கு பதில் கூறத் தொடங்கின.

தீவுப்பகுதி பெரும் மரங்கள் மற்றும் பாரிய கட்டடங்களைக் கொண்டதாக இல்லாததால், கண்மூடித்தனமாக ''Carpet bombing'' செய்து புலிகளை அழித்துக் கொண்டு முன்னேறலாம் என்று நினைத்த படைகளின் எண்ணத்தில் மண் விழுந்தது.

மண்டை தீவில்— வெறும் வெட்ட வெளியில்— ஓரடி எடுத்துவைத்து முன்னேறுவது கூட இயலாத காரியமாக இருந்தது; அடிக்கு ஒரு மிதிவெடி படையினரின் காலைப் பறித்தது.

இந்த நிலையில் படையினர் தங்களுடன் கொண்டு வந்த பாரிய வாகனங்கள் அவர்களுக்கு 'ஆபத்பாந்தவனாக' உதவின. ''புல்டோஸர்'' போன்ற இந்த வாகனங்களை [illegible] மேலாக செலுத்தி, மிதிவெடிகளை மிதித்து வெடிக்கச் செய்தபின்னர், அவ்வழியே படைகள் முன்னேறின.

ஆனாலும் பண்ணைத் தாம்போதிக்கு அந்தப் பக்கத்தில் (மண்டை தீவுப் பக்கத்தில்) வந்து சேர்ந்த படைக்கு அதற்குமேல் முன்னேறுவது இயலாத காரியமாக இருந்தது.

### வாளாதிருந்த இராணுவம்

ஆகஸ்ட் 26 ஆம் திகதியளவில் அங்கு வந்து சேர்ந்த ஸ்ரீலங்காத் துருப்புகள் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் யாழ் கோட்டை தெரிய, அதைப் பார்த்துக் கொண்டு முன்னேற முடியாமல் இரு வார காலத்திற்கு மேல் வாளாதிருந்தனர்; முடங்கிப் போயினர்.

விடுதலைப்புலிகளினால் ஆங்காங்கே தாக்கப்பட்டு, மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட நிலையில் கிடந்தது பண்ணைத் தாம்போதி.

தாம்போதியைத் திருத்தி, அதன் வழியே முன்னேறி, யாழ்ப்பாணத்தைப் பிடிக்க படையினர் முனைப்புடன் செயற்பட்டு வருகிறார்கள் என்று ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்பு துணை அமைச்சரும், படைத் தளபதிகளும் தொலைத்தொடர்பு சாதனங்கள் ஊடாக மீண்டும், மீண்டும் 'பிலாக்கணம்' பாடிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால் கடைசிவரை அவர்களினால் பண்ணைத் தாம்போதி வழியே முன்னேறுவதோ அல்லது யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதோ முடியாமல் போய்விட்டது.

ஆனாலும் பெரும் இழப்புகளுடன், வேறு மார்க்கத்தில் கோட்டைக்குள் புகுவதிலும் அங்கிருந்த படையினரையும் உள்ளேயிருந்த உடைமைகளில் ஒரு பகுதியையும் சேர்த்துக் கொண்டு ஓடித் தப்பி வெளியேறுவதிலும் அவர்களின் முயற்சி பலித்தது

கோட்டை அமைந்திருந்த நிலையம், அதன் அருகில் இருந்த பண்ணைக் குடாக் கடல் பகுதி ஆகியவை அதற்குப் பேருதவியாக அமைந்தன.

படையினர் தப்பிச் செல்ல பாவித்த பாதையை நன்கு அவதானித்தேன். அவர்களுக்கு வாய்ப்பான பல அம்சங்களைக் கோட்டை கொண்டிருந்தது.

(வளரும்)

- கூர்விழியான் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி. சீ. ஈ. உயர் பரீட்சை எப்போது நடக்கும்?

## கல்விப் பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், நவ. 4

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சுமுக நிலை ஏற்பட்டு, மூன்று மாதங்களின் பின்பே ஜி. சீ. ஈ. (உயர்தர) மாணவருக்கான விசேட பரீட்சை நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு, வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரைத் தாம் கேட்டிருப்பதாக வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

உயர்தர மாணவர்களுக்கான பாடத்திட்டம் இன்னமும் முற்றாக முடிவடையவில்லை மாணவர்கள் பலரும் இடம்பெயர்ந்துள்ளனர். படிக்கக்கூடிய சூழ்நிலையும் திருப்திகரமாக இல்லை என்றும் பணிப்பாளர் கூறினார்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்த பின்பே விசேட பரீட்சை நடத்தப்படும் என கல்வி அமைச்சு அதிகாரிகள் கூறியதாக வெளிவந்த செய்தி குறித்துக்கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார். [ஒ 6]

# உலகத் தமிழர் மாநாடு அடுத்தமாதம் மலேசியாவில்

சென்னை, நவ. 4

தமிழர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் குறித்து ஆராயும் முதலாவது உலகத் தமிழர் மாநாடு, மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 12, 13, 14 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

உலகத் தமிழர் மாமன்றம் இதனை ஒழுங்கு செய்துள்ளது. தமிழக முதலமைச்சர் திரு கருணாநிதியும் இம் மாநாட்டில் கலந்து கொள்கிறார். (உ-எ)

## துருப்புக்களைப் பார்வையிட

# வளைகுடா செல்கிறார் புஷ்!

வாஷிங்டன், நவ. 4

வளைகுடாவில் நிலைகொண்டுள்ள சுமார் மூன்று லட்சம் அமெரிக்க படைகளை நேரிற் பார்வையிடும் எட்டுநாள் விஜயம் ஒன்றை ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இம்மாத இறுதியில் மேற்கொள்ள விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்போது எகிப்து மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கும் ஜனாதிபதி புஷ் விஜயம் செய்யவிருக்கிறார்.

இதேவேளை— சவூதி அரேபியாவுடனான எல்லைப்புறத்தில் தனது படைகளை பலப்படுத்தும் பணியில் ஈராக் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [ஓ எ]

# அகதிகளுடன் சென்ற வள்ளம் கடற்படையால் மூழ்கடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 4

திருகோணமலை மாவட்டம் திரியாயிலிருந்து முல்லைத்தீவு நோக்கி கடந்த மாத நடுப்பகுதியில் தமிழ் அகதிகளை ஏற்றிச் சென்ற மூன்று வள்ளங்களைக் கடற்படையினர் தாக்கி, அவற்றில் ஒன்றை மூழ்கடித்தனர்.

மற்றைய படகுகளில் இருந்த பத்து அப்பாவிப் பொதுமக்கள் படையினரால் கைது செய்யப்பட்டு கிளப்பன்பேர்க் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது (உ)

# மரண அறிவித்தல்

## திரு எஸ்.எஸ். பிரான்சிஸ்

பிரபல சட்டத்தரணியும், யாழ் மாவட்ட மரண விசாரணை அதிகாரியுமான திரு எஸ். எஸ். பிரான்சிஸ் காலமானார். அன்னார் வயலட் (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை) யின் அன்புக் கணவரும், ஷ மினி, சுரேஷ் (டாக்டர், லண்டன்), நரேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும், அலோசியஸின் அன்பு மாமனாரும், மயூரன், லுசாந், ஜிந்தூஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சந்தியா செபஸ்ரி, திருமதி செபமாலை (கனகம்) யின் சிரேஷ்ட புதல்வனும், பொன்ராசா, சின்னராசா (P.M), சுகிர்தம், நாதன் (ஆர் கே. அன்சன்ஸ்) பாலு (பிரான்கோ டிரான்ஸ்போர்ட் சேர்விஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பொன்னத்துரை (உதவி திட்டமிடல் பணிப்பாளர், திருமலை), டாக்டர் சேவியர், காலஞ்சென்ற டாக்டர் அழகராஜ் சேவிடர், மணி இராஜேந்திரா, பெனடிற்க் சேவியர், பேர்னாட் சேவியர் (இன்ஜினியர் அவுஸ்திரேலியா), மலர் சேவியர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், P.A சேவியர் (முன்னாள் யாழ் நகர மேயர்), இராஜேந்திரா (சட்டத்தரணி கொழும்பு) ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னாரின்பூதடவுல் நேற்று மதுரை அன்னை வேளாங்கண்ணி கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:

M.A அலோசியஸ் (மருமகன்)

3,5 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(14276)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பாக். பிரதமர் நவாஸ் ஷெரீப் புதன் பதவி ஏற்பு

இஸ்லாமபாத், நவ 4

பாகிஸ்தானின் புதிய பிரதமராக ஜனாப் நவாஸ் ஷெரீப் [வயது 41] எதிர்வரும் புதன் கிழமை பதவி ஏற்கவிருக்கிறார்.

பஞ்சாப் மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரான ஷெரிப், விமானவிபத்தில் கொல்லப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ஸியா-உல்-ஹக்கின் நெருங்கிய ஆதரவாளராக விளங்கியவர். [ஓ-எ]

# மூன்றாவது துணை அமைச்சர் ராஜினாமா!

புதுடில்லி, நவ.4

திருமதி மேனகாகாந்தி, திரு. பக்தசரண்தாஸ் ஆகியோரைத் தொடர்ந்து இந்திய மத்திய அமைச்சரவையில் இருந்து மற்றும் ஒரு துணை அமைச்சரும் நேற்று ராஜினாமாச் செய்தார்.

நாடாளுமன்ற விவகாரத் துறை துணை அமைச்சர் திரு. ஜகதீஸ் கங்கர் என்பவரே நேற்று ராஜினாமாச் செய்தவராவார்.

இடைக்காலத் தேர்தல் ஒன்றைத் தவிர்க்கும் விதத்தில் ஜனதா தள் நாடாளுமன்றக் குழுத்தலைவர் பதவியில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என திரு. கங்கர் தெரிவித்திருக்கிறார். (ஓ-எ)

# குடாநாட்டில் மழை

யாழ்ப்பாணம் நவ. 4

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக குடாநாட்டில் பல இடங்களில் வெள்ளம் தேங்கிக்காணப்படுகிறது.

யாழ். நகரில் நேற்று முழுவதும் இடைவிடாது மழை பெய்ததுடன், காற்றும் சற்றுப் பலமாக வீசியது.

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் வயல்களிலும் வெள்ளம் தேங்கத் தொடங்கியுள்ளது. (ஓ 5)

### இராணுவ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விக்கப்பட்டது.

இதே சமயம் —

மன்னார் மோதல்களில் இரண்டு விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்ததாக நேற்றுமுன்தினம் வெளியான செய்திகள் தவறு என்றும் —

இரண்டு போராளிகள் மட்டும் காயமுற்றனர் என்றும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

### அரச பதவிப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிலைய அதிபர்கள், ரயில்வே காவலர்கள் ஆகிய பதவிகளுக்குரிய பொதுப் போட்டிப் பரீட்சைகள் மேற்குறிப்பிட்ட திகதியில் நடக்கும்.

இதேவேளை தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைகள் இம்மாதம் 24 ஆம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது, பரீட்சைகள் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பல முக்கிய இடங்களிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

யுத்தம் தொடர்வதால் இப்போது பிரஸ்தாப மாகாணத்தில் பரீட்சை எதையும் நடத்தும் சாத்தியம் இல்லை.

ஆனால் பரீட்சைத் திகதிகள் குறித்து வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிவித்தலில் வடக்கு - கிழக்கு வாழ் பரீட்சார்த்திகளின் நிலை குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.

அவர்களும் பரீட்சைக்குத் தோற்றவேண்டும் என்ற [illegible] ளது. அவர்கள் எங்கே தோற்றுவது? [அ]

# வடக்கு, கிழக்கிற்கு தனியாக நிர்வாக சேவைப் பரீட்சை

கொழும்பு, நவ 4

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா நிர்வாக சேவைக்கு பதவிகளை நிரப்புவதற்கு விசேட பரீட்சைகள் நடத்தப்படும்.

கட்டுப்பாடில்லாத போட்டிப் பரீட்சை, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை என இரண்டு பரீட்சைகளை நடத்துவது எனவும்—

வெற்றிடங்களில் 75 சதவீதம் கட்டுப்பாடில்லாத பரீட்சை மூலமும் 25 சதவீதம் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைமூலம்நிரப்பப்படும் எனவும்—பொது நிர்வாக, மாகாணசபை அமைச்சு அக்டோபர் 30 ஆம் திகதி வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைகள் இம்மாதம் 24 25 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

கட்டுப்பாடில்லாத போட்டிப் பரீட்சைக்கு மூன்று வினாப் பத்திரங்கள் இருக்கும் என்றும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை ஸ்ரீ. நி. சேவை விதிகளின் படி நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

வெளி மாகாணங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் பரீட்சைகளில் சித்தி அடைந்தால், ஆகக் குறைந்தது பத்து வருடங்கள் வடக்கு-கிழக்கில் சேவை புரிய வேண்டும் என்ற நிபந்தனைக்கு இணங்கினால் மட்டுமே நியமனம் வழங்கப்படும் — என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ]

# ஆடுகளை கடித்துக் குதறும் கட்டாக்காலி நாய்கள்!

ஏழாலை, நவ. 4

ஏழாலை மத்திப் பகுதியில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்து சென்றுவிட்டதால், அங்கு வீடுகளில் கட்டிவைக்கப்பட்டுள்ள ஆடுகளை, கட்டாக்காலி நாய்கள் கடித்துக் குதறி ருசி பார்க்கின்றன!

இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்துள்ள போதிலும், இடையிடையே அங்கு சென்று தமது வீடுகளைப் பார்வையிட்டு வருவது வழக்கமாகி உள்ளது.

மக்கள் குடியிருக்காத காரணத்தினால் அப்பகுதியில் அலைந்து திரியும் நாய்களுக்கும் உணவு இல்லை. அவை வீடுகளில் கட்டி வைக்கப்பட்டுள்ள ஆடுகளை, ருசி பார்க்கத் தொடங்கியுள்ளன.

அப்பகுதிக்குச் சென்ற ஒருவர் அங்கு பத்துக்கும் மேற்பட்ட ஆடுகளின் பிரேதங்கள் கடித்து உண்ணப்பட்டு மிகுதிக் குறைகள் அழுகிய நிலையில் கிடக்கக் காணப்பட்டதாகத் தெரிவித்தார். (ஓ)

# ஜனதா தள் கட்சியில் பிளவு?

புதுடில்லி, நவ. 4

ஜனதா தள் கட்சியில் பிளவு ஏற்படும் சாத்தியக் கூறுகள் தென்படத்தொடங்கியுள்ளன.

எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெற இருக்கும் அரசின் நம்பிக்கை கோரும் பிரேரணையின் போது, ஜனதா தள் எம்பிக்களில் ஒரு பிரிவினர் எதிர்த்து வாக்களிக்க இருக்கின்றனர்.

மத்திய அமைச்சரவையில் இருந்து நேற்று பதவி விலகிய நாடாளுமன்ற விவகார துணை அமைச்சர் ஜகதீஷ் கங்கர் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

திரு தேவிலாலைச் சந்தித்த பின்னரே தான் ராஜினாமாக் கடிதத்தை பிரதமருக்கு அனுப்பியதாகவும் அவர் சொன்னார். (ஓ-எ)

# ராஜீவ் - வெங்கட் சந்திப்பு

புதுடில்லி, நவ. 4

முன்னாள் பிரதமரும், இந்திரா காங்கிரஸ் தலைவருமான ராஜீவ்காந்தி நேற்று ஜனாதிபதி வெங்கட்ராமனைச் சந்தித்துப் பேசினார்.

திரு காந்தியுடன் முன்னாள் அமைச்சரான திரு. வி. பி. நரசிம்மராவும் சென்றிருந்தார்.

தற்போதைய அரசியல் நெருக்கடிகள் குறித்து அவர்கள் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

### மலையகத் தொழிலாளர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாறு வெளியேறத் தவறுவோர் வேலையிழந்தவர்களாகக் கருதப்படுவர்'' என்ற அந்த அறிவித்தலில்—

இந்தியாவுக்குத் திரும்பிப் போகாதவர்கள் அதற்கான காரணத்தை தகுந்த ஆதாரத்துடன் காட்ட வேண்டும். செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான பொது அனுமதிச் சீட்டுக்கு விண்ணப்பிக்காதவர்கள் உடன் விண்ணப்பிக்க வேண்டும். தகுந்த காரணம் இன்றி எவராவது போவதற்கு மறுத்தால் உடன் வேலையில் இருந்து நீக்கப்படுவர். தாங்கள் இந்தியா போகும் போது, தோட்ட அதிகாரிக்கு ''லயன் காம்பரா''வை பாரம் கொடுக்க வேண்டும் — என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதே வேளை இந்திய கடவுச்சீட்டு பெற்றவர்களின் விவரங்களைத் திரட்டுமாறு தோட்ட காரியாலயங்களுக்கு சுற்றறிக்கை ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்தியக் கடவுச் சீட்டு பெற்றவர்கள் அவர்களின் விருப்பத்திற்கு மாறாக நாடு கடத்தப்பட மாட்டார்கள் என முன்னர் உறுதி வழங்கப்பட்டிருந்த போதிலும் மீண்டும் அப்படி ஓர் இயக்கம் ஆரம்பமாகியுள்ளது. (அ-58)

### ஊர்காவற்றுறை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பவற்றின் பிரதிநிதிகளும் அரச அதிகாரிகளும் அடங்கி இருந்தனர்.

தமக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு கிடைக்கவில்லை என்று கூறிய இராணுவத்தினர், குழுவினரை உள்ளே அனுமதிக்க மறுத்து திருப்பி அனுப்பிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை

இந்தக் குழுவினர் அப்பகுதிக்குள் சென்ற சமயத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டதாகஅங்கிருந்து வந்த பொதுமக்களில் ஒருவர் தெரிவித்தார். [ஓ-5]

## தேவை

தகரம், அஸ்பெஸ்டஸ் ஷீட்விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும்:

முகாமையாளர்,
உதயன்- யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org